**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***19th அக்டோபர் / October 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. ஷீபா ஜான்சன்**
Call to Worship — Mrs. Sheeba Johnson

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. ஷீபா ஜான்சன்**
Prayer — Mrs. Sheeba Johnson

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**நல் மீட்பர் பட்சம் நில்லும்**

*1. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*ரட்சணிய வீரரே!*
*ராஜாவின் கொடியேற்றி*
*போராட்டம் செய்யுமே!*
*சேனாதிபதி இயேசு*
*மாற்றாரை மேற்கொள்வார்*
*பின் வெற்றி கிரீடம் சூடி*
*செங்கோலும் ஓச்சுவார்.*

*2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எக்காளம் ஊதுங்கால்,*
*போர்க்கோலத்தோடு சென்று*
*மெய் விசுவாசத்தால்*
*அஞ்சாமல் ஆண்மையோடே*
*போராடி வாருமேன்;*
*பிசாசின் திரள்சேனை*
*நீர் வீழ்த்தி வெல்லுமேன்.*

*3. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*எவ்வீர சூரமும்*
*நம்பாமல், திவ்விய சக்தி*
*பெற்றே பிரயோகியும்;*
*சர்வாயுதத்தை ஈயும்*
*கர்த்தாவை சாருவீர்*
*எம்மோசமும் பாராமல்*
*முன் தண்டில் செல்லுவீர்.*

*4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!*
*போராட்டம் ஓயுமே;*
*வெம்போரின் கோஷ்டம், வெற்றி*
*பாட்டாக மாறுமே!*
*மேற்கொள்ளும் வீரர் ஜீவ*
*பொற் கிரீடம் சூடுவார்;*
*விண் லோக நாதரோடே*
*வீற்றரசாளுவார்.*

**மாறி வாசித்தல் 42ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
✝ "சங்கீதம் 121" — Congregation

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்"

**Psalter Reading "Psalm 121"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**இயேசுவின் நாமமே திருநாமம்**

**இயேசுவின் நாமமே திருநாமம்,-முழு**
**இருதயத்தால் தொழுவோம் நாமும்.**

*1. காசினியில் அதனுக் கிணையில்லையே; - விசு*
*வாசித்த வர்களுக்குக் குறையில்லையே.*

*2. இத்தரையில் மெத்தவதி சயநாமம்; - அதை*
*நித்தமுந் தொழுபவர்க்கு ஜெயநாமம்.*

*3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்; - இது*
*சத்திய விதேய மனமொத்தநாமம் .*

*4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம் - கடி*
*கண்டதிர்ந்து பயந்தோடு தேவநாமம்.*

*5. பட்சமுடன் ரட்சைசெயு முபகாரி, - பெரும்*
*பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மாஸ்டர் பென் சாமுவேல் பால்**
Scripture Reading — Master. Ben Samuel Paul
***மாற்கு 12 : 28 - 34***
Mark 12 : 28 - 34

**அருளுரை** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Sermon — Pastor. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

<u>தேவ தேவனை துதித்திடுவோம்.</u>

*1. தேவ தேவனை துதித்திடுவோம்.*
*சபையில் தேவன் எழுந்தருள*
*ஒருமனதோடு அவர் நாமத்தை*
*துதிகள் செலுத்தி போற்றிடுவோம்*

**அல்லேலூயா தேவனுக்கே**
**அல்லேலூயா கர்த்தருக்கே**
**அல்லேலூயா பரிசுத்தர்க்கே**
**அல்லேலூயா இராஜனுக்கே**

*2. எங்கள் காலடி வழுவிடாமல்*
*எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்*
*கண்மணிப்போல காத்தருளும்*
*கிருபையால் நிதம் வழி நடத்தும்.*

*3. சபையில் உம்மை அழைத்திடுவோம்*
*சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்*
*சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்*
*சாகும் வரையில் உழைத்திடுவோம்*

*4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்*
*நன்மை கிருபை தொடர்ந்திடவே*
*தேவ வசனம் கீழ்ப்படிவோம்*
*தேவ சாயலாய் மாறிடுவோம்*

*5. இயேசு மேகத்தில் வந்திடுவார்*
*வானத்தில் அடையாளம் தோன்றிடுமே*
*நாமும் அவருடன் சேர்ந்திடவே*
*நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம்.*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation

***மாற்கு12 : 30 – 31***
Mark 12 : 30 – 31

***30. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.***
***31. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**